**செய்தி வெளியீடு எண் : 316** **நாள் : 18.02.2024**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு

தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது நடவடிக்கைக்கு உள்ளாவது மிகுந்த கவலையளிக்கிறது. கடந்த இரண்டு மாதங்களில், இத்தகைய கைது நடவடிக்கைகள் மிகவும் அதிகரித்திருக்கின்றன; இக்காலத்தில் 69 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதைவிட அதிர்ச்சியளிப்பது என்னவென்றால், மூன்று மீனவர்களை 'மீண்டும் மீண்டும் குற்றம்புரிபவர்' (habitual offender) பட்டியலில் அநியாயமாகச் சேர்த்து விடுவிக்காமல் தொடர்ந்து சிறையில் அடைத்திருப்பதுதான். இது நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிப்பது மட்டுமல்லாமல், அவர்களது படகுகளை நாட்டுடைமையாக்கும் இலங்கை அரசின் செயல் சிறுகச் சிறுகச் சேர்த்த சேமிப்புகளையும் அழிக்கிறது.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களும், மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் அவர்களும் உடனடியாக இதில் தலையிட்டு நமது மீனவர்கள் விடுதலை செய்யப்படுவதையும் அவர்களது படகுகள் விடுவிக்கப்படுவதையும் உறுதிசெய்திட வேண்டும் எனத் தமிழ்நாட்டு மக்கள் அனைவரின் சார்பாகவும் நான் கேட்டுக்கொள்கிறேன். இதனை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதி, நமது மீனவர்களின் நலனைக் காக்கும் வகையில் உறுதியான நடவடிக்கையை எடுத்திட வேண்டும். ஏனென்றால், அவர்கள் தமிழர்கள் மட்டுமல்ல, பெருமைமிகு இந்தியர்களும் கூட!

The continuous apprehension of Tamil Nadu fishermen by Sri Lankan Navy is deeply concerning. Over the past two months, there has been a sharp rise in arrests, with a staggering 69 fishermen apprehended. What's more alarming is the unjust branding of three fishermen as habitual offenders, leading to their prolonged detention. This situation not only threatens the livelihoods of our fishermen but also puts their hard-earned savings at risk as their boats are nationalised by the Sri Lankan Government.

On behalf of the people of Tamil Nadu, I urgently urge diplomatic intervention from Hon'ble PM Thiru Narendra Modi and Hon'ble Dr S. Jaishankar to ensure the repatriation of our fishermen and the release of their boats. It's crucial to prioritise this matter and take decisive action to safeguard the interests of our fishermen, for they are not just Tamils but proud Indians.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in